©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 7.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 202A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 28, 2015
புரட்டாசி 11, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு-2046

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

சட்ட முன் வடிவுகள்

எண் 8/2015 தமிழ்நாடு மதிப்புக்கூட்டுவரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 2–6

எண் 9/2015 தமிழ்நாடு மதிப்புக்கூட்டுவரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 7–8

எண் 10/2015 தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. .. 9–10

எண் 11/2015 தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 11–12

எண் 12/2015 தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டம் .. .. .. .. 13–14

எண் 13/2015 சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டம் .. .. .. 15–17

2015–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2015**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிக்கப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,– தமிழ்நாடு சட்டம் 32/2006.

(1) (12)–ஆம் கூறுக்குப் பின், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"(12-A) "அப்புறப்படுத்தும் மற்றும் அனுப்பும் முகவர்" என்பது நபர் எவருக்கும் எந்த முறையிலும் பொருட்களை அப்புறப்படுத்துதல் மற்றும் அனுப்புதல் தொடர்பாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சேவை எதனையும் வழங்குவதில் ஈடுபட்டுள்ள நபர் எவரும் என்று பொருள்படும்;";

(2) (24)–ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(24) "உள்ளீட்டு வரி" என்பது அவருடைய வணிக நடவடிக்கையின்போது தொழில் முதலீட்டுப் பொருட்கள் உள்ளடங்கலான பொருட்களை கொள்முதல் செய்வதன் பேரில் பதிவு பெற்ற வணிகர் ஒருவரால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் மற்றொரு பதிவு பெற்ற வணிகருக்கு இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட்ட வரி என்று பொருள்படும்;";

(3) (35)–ஆம் கூறுக்குப் பின், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"(35-A) "வரிப் பிடித்தம் செய்பவர் அடையாள எண்" என்பது 13–A பிரிவின் கீழ் பெறப்பட்ட எண் என்று பொருள்படும்;".

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில், உட்பிரிவு (4)–இல், கூறு (a)–இல் "மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மாநிலத்திற்குள் பதிவு பெற்ற வணிகர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைகள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

6–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 6–ஆம் பிரிவில், உட்பிரிவு (1)–இல் "மாநிலத்திற்கு வெளியேயிருந்து பொருட்களை கொள்முதல் செய்கிற வணிகர் நீங்கலாக ஏனைய வணிகர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மாநிலத்திற்கு வெளியேயிருந்து பொருட்களை கொள்முதல் செய்கிற அல்லது பெறுகிற வணிகர் நீங்கலாக ஏனைய வணிகர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**5.** முதன்மைச் சட்டத்தின் **11–**ஆம் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும். 11–ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

**6.** முதன்மைச் சட்டத்தின் **(13)–**ஆம் பிரிவிற்குப் பின், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- *13-A-எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.*

"**13–**A. *வரிப் பிடித்தம் செய்பவர் அடையாள எண்.*– **13–**ஆம் பிரிவின் கீழ் வரிப் பிடித்தம் செய்யக் கடப்பாடுடைய எந்த ஒரு நபரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகார அமைப்பிற்கு, அத்தகைய முறையில் விண்ணப்பித்து, வரிப் பிடித்தம் செய்பவர் அடையாள எண்ணைப் பெற வேண்டும்.".

**7.** முதன்மைச் சட்டத்தின் **18–**ஆம் பிரிவில்,— 18–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) **(1)–**ஆம் உட்பிரிவில், இனம் (ii)-இல், "மாநிலத்தில் உள்ள சிறப்புப்பொருளாதார மண்டலம்," என்ற சொற்றொடருக்குப் பின், "உற்பத்தி, வணிகம், தயாரிப்பு, பதப்படுத்துதல், ஒன்றிணைத்தல், சிப்பம் கட்டுதல் அல்லது சிப்பம் கட்டும் பொருளாக அல்லது சிப்பம் கட்டுவதற்கான துணைப் பொருட்களாக பயன்படுத்துதல் போன்றவற்றிற்காக" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) **(2)–**ஆம் உட்பிரிவில், "செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க உள்ளீட்டு வரி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**8.** முதன்மைச் சட்டத்தின் **19–**ஆம் பிரிவில்,— 19–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) **(1)–**ஆம் உட்பிரிவில்,–

(a) "செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க வரி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட வரி" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரைகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"**வரம்புரை**:- ஆனால், உள்ளீட்டு வரிவரவினை கோரும் பதிவு பெற்ற வணிகர், பொருட்களின் கொள்முதலின் போது செலுத்த வேண்டியதாகவுள்ள வரியானது அத்தகைய பொருட்களை விற்பனை செய்த பதிவு பெற்ற வணிகரால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் உண்மையாக செலுத்தப்பட்டிருக்கிறது மற்றும் பொருட்கள் உண்மையாகவே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நிரூபித்தல் வேண்டும் :

**மேலும் வரம்புரை:**- ஆனால், **32–**ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட வரி ஒத்திவைப்பானது இச்சட்டத்தின் கீழ் இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக செலுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.";

(2) **(4)–**ஆம் உட்பிரிவில், "செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க வரி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட வரி" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) **(5)–**ஆம் உட்பிரிவில், கூறு (b)-இல் "செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க வரி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட வரி" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) **(9)–**ஆம் உட்பிரிவில், "செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க வரி" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட வரி" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 22–ஆம் பிரிவில், உட்பிரிவு **(3)–**க்குப் பின், பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 22–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(3–A) (2)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், தற்செயல் வணிகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு ஆண்டானது முதல் அல்லது கடைசி ஆண்டிற்குரிய வணிகமாக இருக்கின்ற வணிகர்களைப் பொறுத்தவரையில், வணிகக் கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், பதிவுருக்கள் மற்றும் வேறு பிற ஆவணம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் மற்றும் வரிவிதிப்பு அதிகார அமைப்பினால் தேவையெனக் கருதப்படும் அத்தகைய விசாரணையின் அடிப்படையில் வரிவிதிப்பு செய்யப்படும்.".

24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** முதன்மைச் சட்டத்தின் 24–ஆம் பிரிவில், உட்பிரிவு (1)–ல், "ஐந்து ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ஆறு ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

27–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** முதன்மைச் சட்டத்தின் 27–ஆம் பிரிவில், உட்பிரிவு (4)–க்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(4) (2)–ஆம் உட்பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட வரிக்குக் கூடுதலாக, வரிவிதிப்பு அதிகார அமைப்பானது அத்தகைய கோருதலைப் பொறுத்தவரையில் செலுத்த வேண்டியதாக உள்ள வரியில் நூற்றுக்கு முந்நூறு சதவீதம் என்ற அளவிலான தொகை ஒன்றினை தண்டத் தொகையாக செலுத்துமாறு வணிகரை அறிவுறுத்த வேண்டும்:

வரம்புரை:- ஆனால், அவ்வாறான விதிப்பிற்கு எதிராக காரணம் காட்டுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அந்த வணிகருக்குக் கொடுக்காமல் தண்டத்தொகை எதுவும் விதிக்கப்படுதலாகாது.".

39–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 39–ஆம் பிரிவில்,—

(1) (1)–ஆம் உட்பிரிவில்,–

(i) "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ஓராயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) "ஐம்பது ரூபாய்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ஓராயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 11–ஆம் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) 12–ஆம் உட்பிரிவில், "அல்லது இரண்டாம் படி ஒன்றினை" என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) 15–ஆம் உட்பிரிவில், "இந்தப் பிரிவின் கீழ் பதிவு செய்ய அல்லது அச்சான்றிதழின் நகல் ஒன்று அல்லது அச்சான்றிதழின் இரண்டாம் படி கோரும் விண்ணப்பமானது" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "இந்தப் பிரிவின் கீழ் வணிகர் என பதிவு செய்யக் கோரும் விண்ணப்பமானது" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

64–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 64–ஆம் பிரிவில், உட்பிரிவு (2)–ல், (b)-எனும் கூறில், "ஐந்து ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ஆறு ஆண்டுகள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

67–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**14.** முதன்மைச் சட்டத்தின் 67–ஆம் பிரிவிற்குப் பின், பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"67-A. *முன் உட்புற வழிப்பட்டி அளித்தல்.–* மாநிலத்திற்கு வெளியே உள்ள இடமொன்றிலிருந்து மாநிலத்திற்குள் சேருமிடமொன்றிற்கு வரும் சரக்கு வாகனத்தின் ஓட்டுநர் அல்லது பொறுப்பாளரான பிற நபர் எவரும், அரசால், அவ்வப்போது, அறிவிக்கப்பட்ட பொருட்களை ஏற்றி செல்லும் போது, அதன் வழித்தடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் அல்லது இதற்கென

வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பிற்கு முன்பாக, கேட்கப்படும் போது, வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் மற்றும் வகுத்துரைக்கப்பட்ட முறையில் முன் உட்புற வழிப்பட்டி அளிக்க வேண்டும்.''.

**15.** முதன்மைச் சட்டத்தின் 70–ஆம் பிரிவில், உட்பிரிவு (2)–ல், விற்பனையாளர் அல்லது அனுப்புநர் அல்லது மாற்றுநர்'' என்ற சொற்றொடர் எங்கெல்லாம் வருகின்றதோ அதற்குப் பதிலாக, ''விற்பனையாளர் அல்லது அனுப்புநர் அல்லது மாற்றுநர் அல்லது அப்புறப்படுத்தும் மற்றும் அனுப்பும் முகவர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 70–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 71–ஆம் பிரிவில், உட்பிரிவு (9)–ல், ''விலக்களிப்பு கோரும் வணிகர் எவருக்கும்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''உள்ளீட்டு வரிவரவு, விலக்களிப்பு கோரும் வணிகர் எவருக்கும்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 71–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**17.** முதன்மைச் சட்டத்தின் 79–ஆம் பிரிவிற்குப் பின், பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 79-~~A~~ எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

''79–A. *தன்னியக்கம்.*– (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிமுறைகள், மேற்சொன்ன அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதான எண்ணியல் கையெழுத்துகள், மின்னணு ஆளுமை, கற்பித்துக் கூறுதல், ஒப்புகை மற்றும் மின்னணு பதிவுருக்களை அனுப்புதல், மின்னணு பதிவுருக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துச் சான்றுகளைப் பாதுகாத்தல் உள்ளடங்கலான வகைமுறைகள் முடிந்தவரை இயன்ற அளவிற்கு இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும்படி வகைசெய்தல்.

(2) தானியங்கி தகவல் தொகுப்பக முறையில் எதன் பேரிலும் தயாரிக்கப்படும் அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்து எதுவுமாக இருக்கின்றவிடத்து மற்றும் வணிகர் அல்லது நபர் எவரின் பேரிலும் முறைப்படி அனுப்பப்பட்டுள்ள அத்தகைய அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்தானது, அலுவலர் அல்லது நபர் எவராலும் நேரடியாக கையெழுத்திடப்பட வேண்டும் என்பது தேவையில்லை மற்றும் அத்தகைய அலுவலர் எவராலும் கையெழுத்திடப்படவில்லை என்கின்ற அடிப்படையில் மட்டுமே அது செல்லாதது என்று கொள்ளப்படுதலாகாது .''.

**18.** முதன்மைச் சட்டத்தின் 84–ஆம் பிரிவில், உட்பிரிவு (1)–ல், ''ஐந்து ஆண்டுகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''ஆறு ஆண்டுகள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். *84–ஆம் பிரிவிற்கான திருத்தம்.*

## நோக்க – காரண விளக்கவுரை.

அரசானது, வணிகவரித் துறையில் மின் ஆளுமையின் அடுத்த கட்டத்தினை துவங்கியுள்ளது. இதில், தொழில் நுட்ப உதவியுடன் செய்முறைகளை மாற்றியமைத்தல், குடிமக்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் மற்றும் வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்துதல் மீது கவனம் செலுத்தப்பட உள்ளது. மேற்கூறப்பட்ட நோக்கத்திற்காக முதற்கட்டமாக பதிவிற்காக, நமூனாக்களுக்காக, செலுத்தங்களுக்காக, வரிவிதிப்புக்களுக்காக, சட்டப்பூர்வமான படிவங்களுக்காக மற்றும் சோதனைச் சாவடிகளுக்காக முழுமையான தானியங்கி செய்முறை மென்பொருள் அலகுகளை செயல்படுத்திட மற்றும் மீதமுள்ள அலகுகளை இரண்டாம் கட்டத்தில் செயல்படுத்திட ஒட்டுமொத்த தீர்வுத் திட்டத்தை (Total Solution Project) நடைமுறைப்படுத்துவதென அரசு கருதியுள்ளது.

2. ஒட்டுமொத்த தீர்வுத் திட்டத்தினை தடையற்றதாக மற்றும் எளிமையாக நடைமுறைப்படுத்திட, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) சில வகைமுறைகளுக்குச் சட்டத்திருத்தத்தை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது:–

(a) 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்கு பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 32/2006–இன் படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பதற்கு;

(b) மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 32/2006–இன் படியான செயற்பாட்டு வகைமுறைகளின்படி குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து அலுவல் செய்முறைகளையும் மின்னணு மூலம் நிர்வகிப்பதற்கு;

(c) பணி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வரியை அவர்களுடைய முறையேயான வரிவிதிப்பு வட்டங்களுக்கு தானியங்கியாக மாற்றம் செய்யும் நோக்கத்துடன், ஒப்பந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக செலுத்தத்தின் பேரிலான ஆதாரத்தில் வரிப் பிடித்தம் செய்யக் கடப்பாடுடைய நபர் ஒவ்வொருவருக்கும் வரிப் பிடித்தம் செய்பவர் அடையாள எண்ணை வழங்குவதற்கு;

(d) வரி ஏய்ப்பிற்கு வழி வகுத்திடும் தகுதியற்ற உள்ளீட்டு வரிவரவு கோருதல்களை கட்டுப்படுத்திட, வணிக நடவடிக்கையின் போது தொழில் முதலீட்டுப் பொருட்கள் உள்ளடங்கலான பொருட்களை பதிவு பெற்ற வணிகர் ஒருவரால் மற்றொரு பதிவு பெற்ற வணிகரிடமிருந்து கொள்முதல் செய்யும் போது அந்த பொருட்களை விற்பனை செய்த பதிவு பெற்ற வணிகரால் உண்மையிலேயே அரசுக்கு செலுத்தப்பட்ட வரி அளவிற்கு மட்டுமே உள்ளீட்டு வரிவரவு அனுமதிக்கப்படுவதற்கு;

(e) சிறப்புப்பொருளாதார மண்டலங்களில் அமைந்துள்ள அலகுகளுக்கு மேற்கொள்ளப்படும் பொருட்களின் பூஜ்ஜிய வீத விற்பனையின் போது அத்தகைய விற்பனைக்கு தகுதியுடைய பொருட்களினை விரித்துரைப்பதற்கு;

(f) அரசால், அவ்வப்போது, கூர்உணர்வுமிக்க பொருட்கள் என கருதப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள சில பொருட்களுக்கு மாநிலத்திற்கு வெளியே உள்ள இடமொன்றிலிருந்து மாநிலத்திற்குள் சேரிடமொன்றிற்கு அனுப்பும் போது முன் உட்புற வழிப்பட்டி அளிப்பதற்கு; மற்றும்

(g) கரும்பின் மீதான கொள்முதல் வரியை நீக்கியதன் விளைவாக, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 32/2006–இன் 11–ஆம் பிரிவை விட்டுவிடுவதற்கு.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.சி.சம்பத்,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2015–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/2015**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு

தமிழ்நாடு சட்டம் 32/2006. (2) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு சரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில் 1–ஆம் விளக்கத்தில் 2013–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி அன்று தொடங்குகிற மற்றும் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 31–ஆம் தேதியுடன் முடிவடைகின்ற கால அளவின் போது (c) எனும் கூறுக்கு பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், அதாவது:- இரண்டாம் இணைப்பு பட்டியலுக்கான திருத்தம்

“(c) “அடிப்படை விலை” என்பது, அரசுக்கு சொந்தமான மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு கழகமான தமிழ்நாடு மாநில வாணிப கழகம், மதுபானங்கள் வழங்குநர்களுக்கு மதுபானங்கள் மீது தள்ளுபடியின்றி செலுத்தும் விலையாகும். இது 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் X/1937) செலுத்தத்தக்க ஆயத்தீர்வை மற்றும் இதர தீர்வைகள், வரிகள் மற்றும் வரி விதிப்புகள் அனைத்தும் நீங்கலாகும் ஆனால் போக்குவரத்து கட்டணங்கள் உள்ளடங்கும்.”

**நோக்க – காரண விளக்கவுரை.**

2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டத்தின்படி தமிழ்நாடு சட்டம் 28/2013) 2013–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 26/2014) 2014–ஆம் ஆண்டு நவம்பர் 1–ஆம் தேதியிலிருந்து விட்டுவிடப்பட்ட, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) இரண்டாம் இணைப்புப்பட்டியலில் 1–ஆம் விளக்கத்தின் (c) கூறிலுள்ள "அடிப்படை விலை'' எனும் சொல்லின் பொருள் வரையறை, 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் X/1937) செலுத்தத்தக்க ஆயத்தீர்வை மற்றும் இதர சட்டபூர்வமான தீர்வைகள் மற்றும் வரி விதிப்புகள் உள்ளடங்கலாகும் என பொருள்படுகிறது. ஆகையால், மேற்சொன்ன சொல்லான "அடிப்படை விலை'' என்பது மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் X/1937–யின் கீழ் செலுத்தத்தக்க ஆயத்தீர்வை மற்றும் இதர தீர்வைகள், வரிகள் மற்றும் வரி விதிப்புகள் அனைத்தும் நீங்கலாகும் ஆனால் போக்குவரத்து கட்டணங்கள் உள்ளடங்கும் என வெளிப்படையாக குறிப்பிட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 32/2006–க்கு சட்டத் திருத்தம் மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.சி.சம்பத்,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2015–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/2015**

## 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் X/1939.

2. 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (இதன் பின்னர் இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 3–ஆம் பிரிவின் (3A) எனும் கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும். 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 4–H எனும் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும். 4–H–எனும் பிரிவு விட்டு விடப்படுதல்.

4. முதன்மைச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ‘‘பிரிவு 4, பிரிவு 4–F மற்றும் பிரிவு 4–H’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘பிரிவு 4 மற்றும் பிரிவு 4–F’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

மொழிமாற்றம் செய்யப்பட்ட படத்தின் எந்த ஒரு திரைப்படக் கண்காட்சிக்கு, அனுமதி வழங்குவதற்கு வரித்தொகை உள்ளடங்கலான அனுமதிப்பதற்கான மொத்தச் செலுத்தத்தின் மீது ஐம்பது சதவீதத்தில் கேளிக்கைகள் வரி விதிப்பது குறித்து, 2003—ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 15/2003) 1939—ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் X/1939) பிரிவு 4-H புகுத்தப்பட்டு, 2003—ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 2—ஆம் தேதியிலிருந்து செயலாற்றலுக்கு கொண்டு வரப்பட்டது.

**2.** மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களை அதிக வீதத்திலான கேளிக்கைகள் வரிக்கு உட்படுத்த முடியாது என்ற சென்னை உயர்நீதிமன்ற ஆணையின் காரணமாக, அரசானது தமிழில் நேரடியாக தயாரிக்கப்பட்ட படங்களுக்கும் மற்றும் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்களுக்கும் இடையிலான கேளிக்கைகள் வரிக் கடப்பாட்டிலுள்ள வேறுபாட்டை நீக்குவதென கருதியுள்ளது. எனவே, அரசு, மேற்சொன்ன நோக்கத்திற்காக 1939—ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் X/1939) தக்க வகையில் திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.சி. சம்பத்,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2015–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/2015**

## 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

தமிழ்நாடு சட்டம் X/1939. (2) இது மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் பிரிவு 20–க்குப்பின், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது: 21– எனும் புதிய பிரிவை புகுத்துதல்

"21. **தன்னியக்கம்.–** (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிமுறைகள், மேற்சொன்ன அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதான எண்ணியல் கையெழுத்துகள், மின்னணு ஆளுமை, கற்பித்துக் கூறுதல், ஒப்புகை மற்றும் மின்னணு பதிவுருக்களை அனுப்புதல், மின்னணு பதிவுருக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துச் சான்றுகளைப் பாதுகாத்தல் உள்ளடங்கலான வகைமுறைகள் முடிந்தவரை இயன்ற அளவிற்கு இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும்படி வகைசெய்தல்.

(2) தானியங்கி தகவல் தொகுப்பக முறையில் எதன் பேரிலும் தயாரிக்கப்படும் அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்து எதுவுமாக இருக்கின்றவிடத்து மற்றும் உரிமையாளர் அல்லது நபர் எவரின் பேரிலும் முறைப்படி அனுப்பப்பட்டுள்ள அத்தகைய அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்தானது, அலுவலர் அல்லது நபர் எவராலும் நேரடியாக கையெழுத்திடப்பட வேண்டும் என்பது தேவையில்லை மற்றும் அத்தகைய அலுவலர் எவராலும் கையெழுத்திடப்படவில்லை என்கின்ற அடிப்படையில் மட்டுமே அது செல்லாதது என்று கொள்ளப்படுதலாகாது ."

**<u>நோக்க – காரண விளக்கவுரை.</u>**

**1939–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1939) வகைமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணு மூலம் நிர்வகிக்கும் பொருட்டு, **2000–**ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் **21/2000**) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்கு பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் X/1939–இன் படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.சி. சம்பத்,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2015–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2015**

## 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1990

2. 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் பிரிவு 19–க்குப்பின், பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

19-A- எனும் புதிய பிரிவை புகுத்துதல்

“19-A. தன்னியக்கம்.– (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிமுறைகள், மேற்சொன்ன அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதான எண்ணியல் கையெழுத்துகள், மின்னணு ஆளுமை, கற்பித்துக் கூறுதல், ஒப்புகை மற்றும் மின்னணு பதிவுருக்களை அனுப்புதல், மின்னணு பதிவுருக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் எண்ணியல் கையெழுத்துச் சான்றுகளைப் பாதுகாத்தல் உள்ளடங்கலான வகைமுறைகள் முடிந்தவரை இயன்ற அளவிற்கு இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும்படி வகைசெய்தல்.

(2) தானியங்கி தகவல் தொகுப்பாக முறையில் எதன் பேரிலும் தயாரிக்கப்படும் அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்து எதுவுமாக இருக்கின்றவிடத்து மற்றும் இறக்குமதியாளர் அல்லது நபர் எவரின் பேரிலும் முறைப்படி அனுப்பப்பட்டுள்ள அத்தகைய அறிவிப்பு அல்லது கடிதப் போக்குவரத்தானது, அலுவலர் அல்லது நபர் எவராலும் நேரடியாக கையெழுத்திடப்பட வேண்டும் என்பது தேவையில்லை மற்றும் அத்தகைய அலுவலர் எவராலும் கையெழுத்திடப்படவில்லை என்கின்ற அடிப்படையில் மட்டுமே அது செல்லாதது என்று கொள்ளப்படுதலாகாது .”.

**நோக்க – காரண விளக்கவுரை.**

1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) வகைமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணு மூலம் நிர்வகிக்கும் பொருட்டு, 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்கு பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 13/1990–இன் படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.சி. சம்பத்,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2015—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2015**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2015-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் IV/1919

326-B எனும் பிரிவிற்கான திருத்தம்

2. (இதன் பின்பு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படுவதான) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 326-B எனும் பிரிவிலுள்ள, (1) ஆம் உட்பிரிவில் "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-BB எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 326—BB எனும் பிரிவில், நான்கு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-C எனும் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 326-C எனும் பிரிவில், மூன்று இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-D எனும் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 326-D எனும் பிரிவில், இரண்டு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-E எனும் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 326-E எனும் பிரிவில், "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-F எனும் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 326-F எனும் பிரிவில், இரண்டு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-H எனும் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 326 H எனும் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-I எனும் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 326-I எனும் பிரிவில், "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

326-J எனும் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 326-J எனும் பிரிவில், ஐந்து இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஆணையர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை மாற்றல் செய்தல் மற்றும் வரிச் செலுத்தம் தொடர்பான சிறப்பு வகையம்

11. (1) விளம்பரப்பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப்பட்டிகைகள் மற்றும் விளம்பர அட்டைகள் வைப்பதற்கு முதன்மைச் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட உரிமங்கள் அனைத்தும் இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி, ஆணையரால் வழங்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று மாவட்ட ஆட்சியரிடம் நிலுவையிலுள்ள விளம்பரப்பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப்பட்டிகைகள் மற்றும் விளம்பர அட்டைகள் வைப்பதற்கு வழங்கப்படும் உரிமத்திற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் ஆணையருக்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

(3) ஆணையர், முதன்மைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு, (2) ஆம் உட்பிரிவின்படி மாற்றல் செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை முடித்து வைக்க வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதிக்கு முன்பு முதன்மைச் சட்டத்தின்படி காலம் எதனின் தொடர்பாகவும் அத்தகைய வரி ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறதென்றால் விளம்பரப் பலகைகளின் மீதான விளம்பரம் மீது வரி எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

**நோக்க – காரண விளக்கவுரை.**

**1919**–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) வகைமுறைகளின்படி சென்னை மாவட்டத்திற்குள் வருகிற சென்னை மாநகராட்சிப் பகுதியில் விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப்பட்டிகைகள் மற்றும் விளம்பர அட்டைகள் ஆகியவற்றை வைப்பதற்கான உரிமம் வழங்குவதற்கு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. சென்னை மாநகராட்சியின் எல்லைப்பகுதி, 2011-ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்திலும் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளிலும் அமைந்துள்ள அருகாமையிலுள்ள 42 உள்ளாட்சி அமைப்புக்கள் இணைக்கப்பட்டு விரிவுப்படுத்தப்பட்டது. தற்பொழுது சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முறையே அவரவர் மாவட்ட எல்லைகளுக்குள் உள்ள சென்னை மாநகராட்சிப் பகுதியில் மேற்சொன்ன அதிகாரங்களை செலுத்தி வருகின்றனர். எனவே, சென்னை மாநகராட்சிப் பகுதியில் விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப்பட்டிகைகள் மற்றும் விளம்பர அட்டைகளுக்கு உரிமம் வழங்கி ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் ஒரே மாதிரியான முறை ஒன்றைப் பின்பற்றும் பொருட்டும் சென்னை மாநகராட்சிப் பகுதியில் வைக்கப்படும் விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப்பட்டிகைகள் மற்றும் விளம்பர அட்டைகள் அனைத்தையும் திறம்பட கண்காணிப்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கான உரிமம் வழங்குவதில் ஒரே மாதிரியான முறை ஒன்றை உறுதி செய்வதற்கும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிப்பதென அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்கிணங்க, மேற்கண்ட நோக்கத்திற்காக மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் IV/1919-ஐ பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி, சட்டம்,*
*நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.